# சென்னையில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழுக்கூட்டம் மன்றத்தின் துணைத்தலைவர் பொன்னவைக்கோ தகவல்



தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் 1964-ம் ஆண்டு, தில்லியில் தொடங்கப்பட்ட உலகத்தமிழாராய்ச்சி மன்றத்தின் 9-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இந்த ஆண்டு கோலாலம்பூரில் ஜனவரி மாதம் 29-ஆம் தேதி முதல் பிப்ரவரி 1-ஆம் தேதிவரை சிறப்பாக நடைபெற்றது. அம்மாநாட்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் டான் ஸ்ரீ டத்தோ த.மாரிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற செற்குழுக் கூட்டத்தில் பாரத் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்கள் இந்தியத் துணைத்தலைவராகவும், ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் உலகநாயகி அவர்கள் இந்தியப் பொதுச்செயலராகவும் சைவசித்தாந்தக் கழகத்தின் உரிமையாளர் திரு முத்துகுமாரசாமி அவர்கள் இதியப் பொருளாளராகவும், தமிழ் மூதறிஞர் முனைவர் மருதநாயகம் அவர்கள் ஒருங்கிணைப் பாளராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த புது செயற்குழுவின் முதல் கூட்டம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் முந்தய துணைத்தலைவர் பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி அய்யா அவர்களின் இல்லத்தில் இம்மாதம் 20-ஆம் தேதி நடைபெற்றது. கூட்டத்தைத் தொடங்கிவைத்து பேசிய தலைவர் மாரிமுத்து அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 10-வது மாநாடு 2017-ஆம் ஆண்டு அமெரிக்காவில் முனைவர் Francis S Muthu அவர்களின் வழிகாட்டுதலுடன் நடைபெறும் என்று தெரிவித்தார். அதைத்தொடர்ந்து கூட்டத்தில் கீழ்க்காணும் பல முடிவுகள் எடுக்கப்பட்டன;

1. தென்னாப்பிரிக்கா, மரூஷியஸ், கனடா, ஆஸ்திரேலியா போன்ற உலக நாடுகள் பலவற்றில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கிளைகள் தொடங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. இந்திய கிளையைத் தொடங்க திரு. நந்தன் மாசிலாமணி முன்வந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டது..
2. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஆய்வறிஞர் விருது ஒன்று மாநாட்டின்போது வழங்குவது என்றும் அதற்கு வேண்டிய நிதிக் கருவூலத்திற்கு ( corpus fund ) ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

3. ஆய்வறிஞர் விருதுக்கான நிதிக் கருவூலத்திற்கு முதல் காணிக்கையாக பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி அய்யா அவர்கள் உருபா பத்தாயிரத்துக்கான ( ரூ.10,000 ) காசோலையை தலைவரிடம் வழங்கினார்கள்.

4. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு இதுவரை வங்கிக் கணக்கு இல்லாத குறையைப் போக்க சென்னையில், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொது நிதிக்காக ஒரு வங்கிக்கணக்கும், ஆய்வறிஞர் விருதுக்கான நிதிக் கருவூலத்திற்காக ஒரு வங்கிக்கணக்கும் ஆகிய இரு வங்கிக்கணக்குகளைத் திறப்பதென முடிவுசெய்யப்பட்டது.

5. இந்த இரண்டு வங்கிக்கணக்குகளையும் இந்தியத் துணைத்தலைவரும் இந்தியப் பொருளாளரும் மேலாண்மை செய்வார்கள் என்று முடிவுசெய்யப்பட்டது.

6. தொல்காப்பிம் முதற்கொண்டு பல சங்க இலக்கியங்களில் எராளமான இடைச்செறுகல்கள் செய்யப்பட்டுள்ளன என்றும், அதனால் சங்க இலக்கியங்களின் காலங்கள் மிகவும் பின் தள்ளப் பட்டுள்ளன என்றும் துணைத்தலைவர் பொன்னவைக்கோ அவர்கள் மிகுந்த வருத்தத்தோடு கூறி, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் இவை தொடர்பான ஆய்வுப்பணிகளில் உலகுதழுவி வாழும் தமிழர்களை ஈடுபடுத்தி தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் தனிதன்மையை உலகிற்கு அறிவிக்கும் வகையில் மாநாடுகளில் வழங்கப்படும் கட்டுரைகள் அமைய வழிசெய்ய வேண்டும் என்று வழி மொழிந்தார். இது தொடர்பாக சங்க இலக்கியங்களில் உள்ள இடைச்செறுகல்களை நீக்கி சங்க இலக்கியங்களின் செவ்வியல் பதிப்புகளை வெளியிட வழி செய்யலாம் என முடிவுசெய்யப்பட்டது.

7. இனிவரும் மாநாடுகளில் சங்க இலக்கியங்களின் சிறப்புகளை வெளிக்கொணர வழிசெய்யும் வகையில் தலைப்பகளைக் கொடுத்து அத்தலைப்புகளில் வழங்கப்படும் கட்டுரைகளுக்கு முன்னுரிமை கொடக்கவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

இவ்வாறு உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் துணைத்தலைவர் பொன்னவைக்கோ கூறினார்.